# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1964/10 - 2016 අප්‍රේල් මස 26 වැනි අඟහරුවාදා - 2016.04.26

*1964/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் இலங்கை ருகுணு பல்கலைக்கழகத்தை தாபிப்பது தொடர்பான 1984, சனவரி 24 ஆந் திகதிய 281/ 1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (2016, சனவரி 8 ஆந் திகதிய 1948/ 60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) கட்டளைக்கான அட்டவணையை நிரல் I இல் காணப்படும் "விஞ்ஞான பீடம்" என்னும் பதிவையும் அதன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-

| நிரல் I | நிரல் II |
|---|---|
| "தொழில்நுட்ப பீடம் | 1. பொறியியற் தொழில்நுட்பத்துறை<br>2. உயிரியற் முறைமைசார் தொழில்நுட்பத்துறை<br>3. தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பத்துறை<br>4. பலவினக் கற்கைகள் துறை." |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, ஏப்பிறல் 25.

5-200


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.